இந்து தமிழ் திசை

# இளைஞர் உடல் உறுப்பு தானம்

■ சென்னை

சென்னை பொழிச்சலூர் பிள்ளையார் கோயில் தெருவைச் சேர்ந்தவர் கண்ணன். இவரது மனைவி லலிதா. இவர்களின் மகன் ஸ்ரீராம் (33). தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணியாற்றி வந்தார். கடந்த 30-ம் தேதி பைக்கில் செல்லும்போது தவறி விழுந்ததில் தலையில் காயமடைந்த ஸ்ரீராம், போரூரில் உள்ள ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். ஆனால், அவர் மூளைச்சாவு அடைந்தார்.

மகனின் உடல் உறுப்புகளை தானம் செய்ய விரும்புவதாக பெற்றோர் தெரிவித்தனர்.

இதையடுத்து, ஸ்ரீராம் உடலில் இருந்து கல்லீரல், கண்கள், இதய வால்வுகள் எடுக்கப்பட்டன. டாக்டர் முகமது ரேலா குழுவினர் கல்லீரலை, சேலத்தைச் சேர்ந்த கால்நடை டாக்டர்களுக்கு பொருத்தினர். இரண்டு பேருக்கு கண்கள் பொருத்தப்பட்டன. இதேபோல், இதய வால்வுகளும் பயன்படுத்தப்பட்டன.